தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை 2017 ஆம் ஆண்டு

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தின் 3.1.2 அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமான குறியீடுகளுக்கு ஏற்புடையதான வருமானக் கணக்கு என்பன தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு விடயவெல்லை

தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள். பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர்பு |
|---|---|---|---|
| **நிதி ஒழுங்குவிதி**<br>------------ | | | |
| 128(1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்திருத்தல் | கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் குறைப்பாடுகள் | 2.1.1 |
| 128(1)(ஆ) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் திறம்படவுள்ளனவெனவும், தேவைப்படும்போது அவை அரசாங்க வருமதிகளையும், வருமதிகளை ஒழுங்காக, முற்றாக உடனடியாகச் சேகரித்தலையும், பெற்ற பணங்களுக்கு கணக்கு வைத்தலையும், அரசாங்கத்தின் சார்பில் செலவுகளை அனுமதித்தலையும் ஆற்றப்படும் சேவைகளையும் வழங்கு பொருட்களையும் மேற்பார்வை செய்து அவற்றை பரிசோதித்தலையும் அவற்றுக்கு அரசாங்க நிதியிலிருந்து உடனடியாகச் சரியாகக் கொடுப்பனவு செய்தலையும் சரிவர உறுதிப்படுத்தலுக்கும் போதியளவு ஏற்பாடு செயதிருத்தல் | 1. முகாமைத்துவ குறைப்பாடுகள்<br>2. மிகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருத்தல் | 2.4<br>2.5 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | 1. கட்டநிதி எல்லைகள் காலாண்டுக்கொருமுறை மீளாய்வு செய்யப்படாமை<br>2. கட்டநிதி கணக்கில் மீதியை சீராக்கப்படாமை | 2.8(அ)<br>2.8(ஆ) |
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் காணப்பட்ட குறைப்பாடுகள் | 2.2 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவெனவும், அத்தகைய வேலைக்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிலுவைகள் சம்பந்தமாகவும் அவைகளை விரைவில் அறவிடுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் காலாண்டுக்கொருமுறையாவது அல்லது வேறு வழியில் பணிக்கப்பட்டவாறு தனக்கு அறிவிக்கின்றார்கள் எனவம், | அரசாங்க அலுவலர்களின் நிலுவை மீதிகளை அறவிடப்படாமை | 2.7 |
| 128(1)(ஒ) | எந்த ஒரு செலவு அல்லது பொறுப்பேனும் தனது வாக்குப் பணம் அல்லது பிற அனுமதித்த நிதி ஏற்பாடு ஆகியவற்றின் எல்லைக்குட்பட்டதெனவும் அது போதியளவு அதிகாரத்தைப் பெற்றுள்ளதெனவும், | ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ளுதல் | 2.3 |

**நிதி ஒழுங்குவிதி 128 (2) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை**

| | | | |
|---|---|---|---|
| 128(2)(ஈ) | தான் பொறுப்பாகவுள்ள அரசிறையின் எப்பகுதியாவது பிற திணைக்களங்களாலும் அலுவலகங்களாலும் சேகரிக்கப்படும்போது, அவைகளிடமிருந்து திரட்டுக்கள் பெறப்பட்டு அவை முறையே (அ), (ஆ), (இ) பிரகாரம் தான் தயாரிக்கும் அரசிறை மதிப்பீடுகள், அரசிறைக் கணக்குகள், திரட்டுக்கள் ஆகியவற்றில் சேர்க்கப்படுகின்றன என்பதையும். | வருமானக் கணக்கில் குறைப்பாடுகள் | 2.6 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

### 2.1.1 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

வருடாந்த செயற்றிட்டத்தின்படி திணைக்களத்தினால் 04 பிரதான கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. வருடாந்த செயலாற்றுகை அறிக்கைபடி. அப் பணிகளை நிறைவேற்றுகையில் பின்வரும் குறைப்பாடுகள் அறிய வந்தன.

(அ) அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வரவு செலவு முன்மொழிவுகளுக்கு ஏற்புடையதான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை மேற்பார்வை செய்தல் திணைக்களத்தின் பிரதான கடமைப்பொறுப்புகளாக காணப்பட்டன. அந்த கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றும்போது பின்வரும் குறைப்பாடுகள் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டன.

(i) வருடாந்த வரவு செலவு மதிப்பீடுபடி 2016 ஆம் ஆண்டில் 114 கருத்திட்டங்களும், 2017 ஆம் ஆண்டில் 153 கருத்திட்டங்களும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்கு முறையில் 253,325 மில்லியன் ரூபா மற்றும் 139,905 மில்லியன் ரூபா என்ற வகையில் ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் 2016 ஆம் ஆண்டில் 34 கருத்திட்டங்களும், 2017 ஆம் ஆண்டில் 63 கருத்திட்டங்களும் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாது போயிருந்தது. குறித்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமை காரணமாக ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் ஒழங்குமுறையில் 27,890 மில்லியன் ரூபாவும், 51,575 மில்லியன் ரூபாவும் எஞ்சியிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டில் 27 கருத்திட்டங்களின் பொருட்டு 35,325 ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் அந்தக் கருத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றப்படாமையால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு10 இற்கும் குறைவாக 1.692 மில்லியன் ரூபா மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதே போன்று மேலும் 11 கருத்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தாமையால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் 1,320 மில்லியன் ரூபா மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி குறித்த 11 கருத்திட்டங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு 10 தொடக்கம் நூற்றுக்கு 25 வரையிலான எல்லைக்குள் ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

(iii) மீளாய்விற்கான ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவு மதிப்பீடுபடி 38 துறைகளின் பொருட்டு 153 வரவு செலவு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 139,905 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இலங்கையில் வியாபரங்களை மேற்கொள்வதற்கான வசதிகளை மேம்படுத்தல், பொருளாதார டிஜிடல்மயப்படுத்தல், மற்றும் அரசாங்கத்திற்குரிய வியாபாரங்கள் (SOE) ஆகிய 03 துறைகளின் பொருட்டு 03 வரவு செலவு முன்மொழிவுகளை சமர்ப்பித்து, அதற்காக மொத்தம் 15,150.00 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படாமையால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளிலிருந்து 1,363.81 மில்லியன் ரூபா மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி 13,786.19 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு எஞ்சியிருந்ததுடன், அது ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு 39 ம், நூற்றுக்கு 91 ம் மற்றும் நூற்றுக்கு 96 ம் என்ற வகையில் இருந்தது.

- 2017 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 153 வரவுசெலவு முன்மொழிவுகளின் பொருட்டு 139,905 அன ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 107 முன்மொழிவுகளின் கண்காணிப்பு நடவடிக்கைகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் கண்காணிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டிய 79 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் நிதி முன்னேற்றமானது ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளிலிருந்து நூற்றுக்கு 50 இற்கும் குறைவான அளவினைக் கொண்டிருந்தது.

- மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளிலிருந்து 30,630 மில்லியன் ரூபா மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அது மொத்த ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 78.11 அக இருந்தது.

- 09 துறைகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 16 வரவு செலவு முன்மொழிவுகள் பொருட்டு 15,700 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருப்பினும், அதில் எதிர் பார்க்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தாமை காரணமாக மொத்த ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் குறைநிரப்பு உதவி சேவைகள் மற்றும் அவசர தேவைகளின் பொறுப்புகள் கருத்திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளிலிருந்து ஒதுக்கீடுகளை அளிப்பதற்கான அதிகாரம் வழங்கும் 1342 கடிதங்கள் மூலம் மீண்டுவருஞ் செலவுகளுக்காக 192,978.7 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடும், மூலதன செலவுகளுக்காக 292,267.5 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடும் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் 6(1) பிரிவு பிரகாரம் அவ்வாறு ஒதுக்கீடுகளை மாற்றம் செய்தல் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய அறிக்கையினை ஒதுக்கீடுகளை மாற்றுஞ் செய்த திகதி தொடக்கம் இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. அந்த தகவல்களை உள்ளடக்கி கணக்காய்விடம் சமர்ப்பித்த கடிதக்கோவைகளை பரிசோதனை செய்கையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒதுக்கீட்டு சட்டத்தில் 6(1) பிரிவு பிரகாரம், அவ்வாறு ஒதுக்கீடுகளை மாற்றம் செய்த திகதி தொடக்கம் இரண்டு மாத காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. ஆயினும் இரண்டு சந்தர்ப்பங்களில் அந்தக் காலப் பகுதியை கடந்து அத் தகவல்களை பாராளுமன்றத்தில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ii) பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட மீண்டுவரும் மற்றும் மூலதன ஒதுக்கீடுகள் மாற்றம் செய்வதில் மொத்தமும், ஒதுக்கீட்டுக் கணக்கில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வேறு தலைப்புகளுக்கு ஒதுக்கீடுகளை மாற்றம் செய்வதில் பெறுமதிகளுக்குமிடையில் 201,566.51 மில்லியன் ரூபாவிலான வேறுபாடு காணப்பட்டது.

## 2.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

திணைக்களத்திற்குரிய 03 வாகனங்கள் விபத்துக்குள்ளாகியதால் மொத்தம் ரூபா 128,489 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. திணைக்களத்தால் அது தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 104 பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு, அந்த நட்டங்களை பொறுப்பு கூற வேண்டிய தரப்புகளிடமிருந்து அறவிடவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும், அந்த நட்டங்கள் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் அறவிடப்படவில்லை.

## 2.3 பாரப்படுத்தல்களும் பொறுப்புகளும்

**இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 2017 ஏப்பிரல் 27 ஆந் திகதிய மற்றும் 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 02 (அ) பந்திக்கு இணங்கியொழுகாது 08 செலவு விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த 4,944 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு பயன்படுத்திய பின்னர் எஞ்சிய 153 மில்லியன் ரூபாவை விஞ்சி மொத்தம் 777 மில்லியன் ரூபாவிலான பாரப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை வங்கியுடன் மேற்கொண்ட வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் நிதி குத்தகை பாரப்படுத்தல்களுக்கு ஏற்புடையதாக மூலதன பெறுமதிகள் மற்றும் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் மீதி உறுதிப்படுத்தப்படும் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதி என்பவற்றுக்கிடையில் 1,197.79 மில்லயின் ரூபாவிலான வேறுபாடு காணப்பட்டது.

## 2.4 முகாமைத்துவ குறைப்பாடுகள்

திணைக்களத்தால் வரவுசெலவு மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு ஏற்புடையதான நிகழ்ச்சித்திட்டம் தனியார் நிறுவனமொன்றின் மூலம் 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான உடன்படிக்கை மேற்கொண்ட திகதி தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆந் திகதி வரை நிகழ்ச்சித்திட்டத்தை இற்றைப்படுத்துவதற்காக மொத்தம் 7.66 மில்லியன் ரூபா திணைக்களத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு நவம்பர் 02 ஆந் திகதிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் அறிக்கைபடி அந்த நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்த சில குறைப்பாடுகளை சரி செய்வதற்கு திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் அறிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. திணைக்களத்தால் அந்தக் குறைப்பாடுகளை 2018 ஆம் ஆண்டில் வரவு செலவு மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. ஆயினும் அந்தக் குறைப்பாடுகள் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆந் திகதியில் பூர்த்தி செய்யப்பட்டதென உறுதிப்படுத்தவதற்கான சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆயினும் இணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) கருத்திட்டம் நடைமுறைப்படுத்தியதால், அதன்மூலம் வரவுசெலவு திட்டம் தயாரிக்க முடியுமென திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருப்பினும், ITMIS கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆந் திகதியிலும் ஆய்வு மட்டத்தில் நிலவியது.

## 2.5 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகித்தல்.

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப் பகுதிக்குள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடு, உபயோகம் மற்றும் மிகுதி தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவினம் | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | மிகுதி | மிகுதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| ------ | --------- | ------------- ரூபா. மில்லியன் | --------------- ரூபா. மில்லியன் | ---------- ரூபா. மில்லியன் | ---------- |
| 2013 | மீண்டுவரும் | 38,607.79 | 37,771.78 | 836.01 | 2.17 |
| | மூலதன | 38,601.17 | 37,865.69 | 735.48 | 1.91 |
| | **மொத்தம்** | **77,208.96** | **75,637.47** | **1,571.49** | 2.04 |
| 2014 | மீண்டுவரும் | 9,353.76 | 9,092.22 | 261.54 | 2.80 |
| | மூலதன | 22,008.34 | 21,765.82 | 242.52 | 1.10 |
| | **மொத்தம்** | **31,362.10** | **30,858.04** | **504.06** | 1.61 |
| 2015 | மீண்டுவரும் | 71,994.26 | 65,790.45 | 6,203.81 | 8.62 |
| | மூலதன | 144,569.37 | 142,407.66 | 2,161.71 | 1.50 |
| | **மொத்தம்** | **216,563.63** | **208,198.11** | **8,365.52** | 3.86 |
| 2016 | மீண்டுவரும் | 47,391.20 | 47,328.56 | 62.64 | 0.13 |
| | மூலதன | 584,716.10 | 252,349.74 | 332,366.36 | 56.84 |
| | **மொத்தம்** | **632,107.30** | **299,678.30** | **332,429.00** | 52.59 |
| 2017 | மீண்டுவரும் | 195,435.54 | 194,521.81 | 913.73 | 0.47 |
| | மூலதன | 299,383.35 | 296,539.46 | 2,843.89 | 0.95 |
| | **மொத்தம்** | **494,818.89** | **491,061.27** | **3757.62** | 0.76 |

மீளாய்விற்கான ஆண்டில் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடு மற்றும் உபயோகம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருத்தல்.**

03 செலவு விடயங்களின் பொருட்டு மொத்தம் 6,519 மில்லியன் ரூபாவிலான மிகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்தமையால் அந்த செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக உபயோகத்தின் பின்னர், மிகுதி ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 13 தொடக்கம் நூற்றுக்கு 83 வரையிலான எல்லைக்குள் காணப்பட்டது.

**2.6 வருமானக் கணக்கு**

2017 ஆம் ஆண்டுக்காக 20.03.04.00 ஆம் இலக்க வருமான குறியீடுக்கு அமைவாக வருமான மதிப்பீடுகளை தயாரித்தல், வருமானங்களை திரட்டுதல், கணக்கில் வைத்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பிக்கும் கடமைப் பொறுப்பு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த வருமான குறியீடுக்கு ஏற்குடையதாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்விற்கான ஆண்டுக்காக வருமானக் கணக்கிற்கு ஏற்படையதாக வருமானப் மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை. வருமானக் குறியீட்டின் கீழ் மீளாய்விற்கான ஆண்டில் 55.80 மில்லியன் ரூபாவிலான தேறிய வருமானம் திரட்டப்பட்டிருந்தது.

(ii) 2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதிய BD/1/1/II/1/(உப)1/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தின் கடிதம்படி, 14 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களால் மொத்தம் 3,116.91 மில்லியன் ரூபாவிலான வருமானம் பிழையாக வேறு வருமான குறியீட்டின்கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் அப் பிழையை சரி

செய்தலை உறுதிப்படுத்தவதற்கு போதுமன அளவில் சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) தீர்வை வரி சலுகையின்கிழ் மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்ட அலுவலர்கள் பதவிகளிலிருந்து விலகிச் செல்கையில், மோட்டார் சைக்கிள்களுக்கு ஏற்புடையதாக மீண்டும் செலுத்தப்பட்ட பணத் தொகையை நிதி குத்தகை செலுத்தல் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்காக உரிய தகவல்களை நிதி நிறுவனத்திடமும் மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் திணைக்களத்திடமும் அறிவித்து அனுப்ப வேண்டும். 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக அவ்வாறு அறவிடப்பட்டிருந்த பணத் தொகையை வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. அந்த மோட்டார் சைக்கிள்களுக்கு ஏற்புடையதான நிதி குத்தகை தவணை மற்றும் வட்டி அரசாங்கத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(iv) தீர்வை வரி சலுகையுடன் கூடிய மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்ட அலுவலர்கள், மோட்டார் சைக்கிள் உரித்து கிடையாத பதவிக்கு மாற்றம் பெற்றுச் செல்கையில், சேவையிலிருந்து விலகிச் செல்கையில், சேவையில் இடைநிறுத்துகையில், உரிய காலத்திற்கு முன்னர் ஓய்வு பெறுகையில் அறவிடப்பட்டடிருந்த ரூபா 283,420 ஆன தொகையினை காசோலைமூலம் வரவு செலவு பணிப்பாளர் நாயகத்திடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த வருமானங்களை இந்த வருமான குறியீட்டில் வரவு வைக்காது வேறு வருமான குறியீட்டில் வரவு வைக்கப்பட்டிருந்தமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது

(v) 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MC/1 ஆம் இலக்க வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் 03 ஆவது பந்திபடி, 2014 ஆம் ஆண்டு யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் ஓராண்டு சேவைக் காலத்துக்கு குறைந்த அலுவலரொருவர் பெற்றுக்கொண்ட மோட்டார் சைக்களின் பொருட்டு ரூபா 100,000 ஆன செலுத்தல் மேற்கொள்ள வேண்டியிருந்தது. மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அறிய வந்தவாறு திஸ்ஸமகாராமை பிரதேச செயலகத்தில் அலுவலரொருவர் 2014 ஆம் ஆண்டு யூன் 30 ஆந் திகதியில், அதாவது எதிர் வரும் சேவைக் காலம் ஓய்வு பெறும் திகதியில் ஓராண்டுக்கு குறைந்த காலப் பகுதி இருக்கும்போது, அந்த அலுவலரிடமிருந்து ரூபா.50,000 ம் மட்டும் அறவிடப்பட்டிருந்தது. அதன்படி மேலும் அறவிட வேண்டிய பணத் தொகையினை மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் அறவிடப்படவில்லை.

(vi) 2017 மார்ச் 24 ஆந் திகதிய PL/7/8/4-III ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சின் செயலாளரால் பொலிஸ் மாஅதிபரிடம் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் பிரகாரம், பொது மக்களின் பிரதிநிதிகளிடம் 2,555 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 570 பிரதிநிதியாளர்கள் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 28.50 மில்லியன் ரூபாவிலான நிலுவை தவணைப் பணம் செலுத்த வேண்டியிருந்தது.

(vii) கணக்காய்விற்கு சமர்ப்பித்த தகவல்கள்படி, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் பொது பிரதிநிதியாளர்களுக்கும் 142,851 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிந்ததுடன், அந்த மோட்டார் சைக்கிள்களின் பொருட்டு மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொள்ளப்பட்டவர்களால் 6,784.33 மில்லியன் ரூபாவிலான அடிப்படை கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு சமர்ப்பித்திருந்த வருமானக் கணக்கு பிரகாரம், தேறிய வருமானத்தின் மொத்தம் 6,584.82 மில்லியன் ரூபாவும், 2018 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த 20.02 மில்லியன் ரூபாவிலான வருமானத்துடன் மொத்தம் 6,604.84 மில்லியன் ரூபா தொகையுடன் ஒப்பிடுகையில் 179.49 மில்லியன் ரூபாவிலான வேறுபாடு இருப்பதாக அறிய வந்தது.

(viii) 2015 ஆம் ஆண்டு யூலை 07 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MC-II ஆம் இலக்க வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் பிரகாரம், கள அலுவலரொருவர் மோட்டார் சைக்கிள் உரித்தற்ற பதவியொன்றுக்கு இடம் மாற்றம் பெற்றுச் செல்கையில், சேவையிலிருந்து விலகிச் செல்கையில், சேவையிலிருந்து இடைநிறுத்துகையில், உரிய காலத்திற்கு முன்னர் ஓய்வு பெறுகையில் மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியை அறவிடப்பட்டு தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். ஆயினும் அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வில் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடம் அனுப்பி வைக்காது அந்த அலுவலகங்களில் பொது வைப்புக் கணக்குகளில் மொத்தம் 2.19 மில்லியன் ரூபா வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது..

(ix) 2017 ஆம் ஆண்டு யூலை 03 ஆந் திகதிய BD/GPS/130/9/14 MC-8 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் 03 ஆவது பந்தி பிரகாரம், மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்ட அலுவலர் ஒருவர் 05 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் சம்பளமற்ற அல்லது 06 மாதங்களுக்கு அதிகமான காலப் பகுதி சம்பளத்துடன்கூடிய வெளிநாட்டு லீவு பெற்றுக்கொண்டு வெளிநாடு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாயின், அந்த அலுவலரால் மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திடம் செலுத்தல் வேண்டும். ஆயினும் 04 மாவட்ட செயலகங்களால் அவ்வாறு மேற்கொள்ளாதபடியால் 1.73 மில்லியன் ரூபா சீராக்கப்படாதிருந்தது.

(x) 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 07ஆந் திகதிய BD/GPS/130/9/14 MC-11 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனை பிரகாரம், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் பெற்றுக்கொண்ட அலுவலரொருவர், மோட்டார் சைக்கிள் உரித்தற்ற பதவியொன்றுக்கு மாற்றம் பெற்றுச் செல்கையில் அல்லது விலகிச் செல்கையில், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் பெற்றுக்கொண்டு 05 ஆண்டு காலம் பூர்த்தி செய்யாதுள்ளவிடத்து, மோட்டார் சைக்கிளில், ஸ்கூட்டரில் சந்தைப் பெறுமதியை சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். மாதிரி பரிசோதனைகளில் 09 அலுவலகங்களால் மொத்தம் 26.68 மில்லியன் ரூபா அவ்வாறு அறவிட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(xi) 2017 ஆம் ஆண்டு யூலை 03 ஆந் திகதிய BD/GPS/130/9/14 MC-8 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் 04 ஆவது பந்தி பிரகாரம், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் பெற்றுக்கொண்ட அலுவலர் ஒருவர் மரணமடையும் சந்தர்ப்பத்தில், வாழ்க்கைத் துணையிடமும் திருமணமாகாத அலுவலராயின் சம்பந்தப்பட்ட அலுவலரின் பெற்றோர்கள் அல்லது கிட்டிய உறவினரிடத்தில் அந்த மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டரின் உரிமை கையளிப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பினும், அவ்வாறு மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்டு மரணமடைந்த அலுவலரின் வாழ்கைத்துணைக்கு அல்லது கிட்டிய உறவினரிடம் கையளிக்கும் பணிகள் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் மேற்கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அறிய வந்தது.

(xii) 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆந் திகதிய BD/GPS/130/9/14 MC/1 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் பிரகாரம், கொடுப்பனவு முடியும் வரை கள அலுவலரால் உறுதிப்படுத்திய விண்ணப்ப படிவம், பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி, மோட்டார் சைக்கிளின் பதிவுச் சான்றிதழின் பிரதி உள்ளடக்கிய ஆவணங்களை பேணிச் செல்ல வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாத சில நிறுவனங்கள் உள்ளதாக மாதிரி பரிசோதனையில் அறிய வந்தது.

(xiii) மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்ட கள அலுவலர்கள் வேறு அலுவலகங்களுக்கு மாற்றம் பெற்று செல்கையில் அல்லது இடம் மாற்றம் பெற்று வருகையில் அவ்வலுவலர்கள் மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்ட அலுவலர்களா என்பது தொடர்பாக நிறுவனத் தலைவர் அறிந்துக் கொள்ளும் முறையை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறு மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்ட அலுவலரொருவர் இடமாற்றத்தின் பின்னர் களமல்லாத வேறு பதவிக்குச் செல்லுதல், சேவையிலிருந்து விலகுதல், உரிய வயது பூர்த்தியாவதற்கு முன்னர் ஓய்வு பெறுதல் போன்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால், மோட்டார் சைக்கிள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாது கைவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(xiv) 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதிய BD/GPS/130/9/14 MC/11 ஆம் இலக்க கடிதத்தில் 03 ஆவது பந்தி பிரகாரம், இந்த மொட்டார் சைக்கிள்களின் பொருட்டு தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் அல்லது இலங்கை தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம்மூலம் பூரண காப்புறுதி காப்பீடு பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அந்த ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு தகவல்கள் குறிப்பிடப்படும் முறைமை திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

(xv) கள ஆலுவலர்கள் தொகுதிக்குள் உள்ளடங்காத அலுவலரான தையல் ஆலோசகரிடம் முறையான அனுமதியின்றி தீர்வை சலுகையின்கீழ் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டிருந்தது.

(xvi) இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்ட அலுவலர்கள் மோட்டார் சைக்கிள் உரித்தற்ற பதவிகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருப்பினும், கள கடமைகளின் பொருட்டு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களை மீண்டும் அலுவலகத்திடம் (களஞ்சியத்திடம்) கையளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிய வந்தது.

(xvii) இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தும்போது தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தால் ஆலோசனை கடிதங்கள் வழங்குதல் அவ்வப்போது மேற்கொண்டிருத்தல் (ஒரே முறையில் வெளியிடப்படாது) மற்றும் முன் ஆலோசனை இல்லாமை காரணமாக ஆலோசனை நடைமுறைப்படுத்தும் அலுவலர்கள் பிரச்சினைகளை எதிர் நோக்கியிருந்தமை கணக்காய்வில் அறிய வந்தது.

(xviii) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தால் பௌத்த பிக்குமார்களுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாதபோதிலும், தென் மாகாண சபை மற்றும் உள்;ராட்சி அமைச்சினால் பௌத்த பிக்குமார்களுக்கு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்தன.

(xix) இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மோட்டார் சைக்கிள் வழங்கும்போது, பொறுப்பு கூற வேண்டிய ஒரு அலுவலரால் ஒவ்வொரு கள அலுவலருக்கும் வழங்கிய மோட்டார் சைக்கிள் தொடர்பாக முறையான நடவடிக்யைின்கீழ் மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அறிய வந்தது.

(xx) 2014 ஆம் ஆண்டு யூலை 23 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MC ஆம் இலக்க மற்றும் 2014 ஆம் ஆண்டு யூலை 23 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் சுற்றறிக்கையில் 02 ஆவது பந்தி பிரகாரம், 2014 ஆம் ஆண்டு யூன் 30 ஆந் திகதியில், எதிர்வரும் சேவைக் காலம் ஓராண்டுக்கு குறைவாக இருப்பின் மோட்டார் சைக்கிளின் பொருட்டு ரூபா 100,000 ம், ஸ்கூட்டரின் பொருட்டு ரூபா 90,000 ம் அறவிட வேண்டியிருந்தது. ஆயினும் தென் மாகாண சபையில் அமைந்துள்ள பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களில் காலம் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 இல் முடிவடைந்திருந்ததுடன், சில உள்;ராட்சி நிறுவனங்களில் காலம் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியில் முடிவடைந்திருந்த படியால் அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**2.7 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திடம் ஏற்புடைய விடய இலக்கம் 24001 இன்கிழ் அரசாங்க அலுவலர்களிடம் முற்பணக் கணக்கு பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உண்மையான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவு | | பற்று மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உண்மையான | ஆகக் குறைந்த | உண்மையான | ஆகக்கூடிய எல்லை | உண்மையான |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 10.00 | 9.99 | 5.00 | 5.43 | 33.00 | 25.81 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவை கடன் மீதி அறவிடப்படாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பித்த கணக்கிணக்க கூற்று பிரகாரம் இடம்மாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களின் கடன் மீதி தவிர்ந்த, அன்றைய திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவையாக இருந்த மீதிகளின் மொத்தம் ரூபா 613,221 ஆக இருந்தது.அந்த நிலுவை கடன் மீதி 02 ஆண்டுகள் தொடக்கம் 17 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதியில் இருந்து வந்திருப்பினும், அந்த நிலுவை கடன் மீதியினை அறவிடும் பின்னாய்வு நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தது.

**2.8 கட்டுநிதி கணக்கு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டு சனவரி 09 அந் திகதிய TO/BE1/2/IMP/240/2017 ஆம் இலக்க திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டின் கட்டுநிதி எல்லையை தீர்மானிக்கும் கடிதம் பிரகாரம், மாதாந்த கட்டுநிதி எல்லை, காலாண்டுக்கொருமுறை மீளாய்வு செய்து உண்யைமான தகவல்களை அறிக்கையிட்டு, கட்டுநிதி எல்லைகளை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டிருப்பினும், திணைக்களத்தால் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஆ) கட்டு நிதி கணக்கில் 09 அண்டுகளுக்கு மேலதிகமாக இருந்து வந்த ரூபா 83,325 மீதி மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் சீராக்கப்படவில்லை. 2008 ஆம் ஆண்டில் அலுவலரொருவருக்கு வழங்கிய வெளிநாட்டு பிரயாண முற்பணத் தொகை அந்த அலுவலரால் சீராக்கப்படாமை காரணமாக இந்த மீதி ஏற்பட்டிருப்பினும், அந்த தொகையினை அலுவலரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**2.9 மனித வள முகாமைத்துவம்**

**இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளுக்கான செலவினம்**

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிட பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு தொகுதி பொருட்டு ரூபா 91.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தனி நபர் வேதானதிகளின் செலவு ரூபா 686,273 ஆக இருந்தது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 40 | 30 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 75 | 64 | 11 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 42 | 37 | 05 |
| | **மொத்தம்** | **161** | **134** | **27** |